செ. கு. எண்: 045 நாள்:22.02.2014

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 22.2.2014

திருநெல்வேலி மாநகரம், பேட்டை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. லோகராஜ் அவர்கள் 2.1.2014 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை, ஆவடி, தமிழ்நாடு சிறப்புக் காவல் படை 2ம் அணி, 'இ' நிறுமத்தில் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. K.மணிகண்டன் அவர்கள் 4.1.2014 அன்று பட்ரவாக்கம் ரயில் நிலையம் அருகே தண்டவாளத்தைக் கடக்க முற்பட்ட போது, ரயில் மோதியதில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 5.1.2014 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திண்டுக்கல் மாவட்டம், பழனி நகர காவல் நிலையத்தில் தலைமைக் காவராகப் பணி புரிந்து வந்த திரு. M.பாலன் அவர்கள் 5.1.2014 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

திருவண்ணாமலை மாவட்டம், சாத்தனூர் அணை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. K.ராமலிங்கம் அவர்கள் 7.1.2014 அன்று வேலூர் மாவட்டம், பாகாயம் அருகே தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தெற்கு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. G.செழியன் அவர்கள் 8.1.2014 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

திருவள்ளூர் மாவட்டம், மப்பேடு காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. B.ரவிகுமார் அவர்கள் 8.1.2014 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், புதுப்பாக்கம் கிராமம் அருகே தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தஞ்சாவூர் மாவட்ட ஆயுதப் படை பிரிவில் முதல் நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திருமதி R.தீபா அவர்கள் 8.1.2014 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

வேலூர் மாவட்டம், பணமடங்கி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. T.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 9.1.2014 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், முத்தியால் பேட்டை காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. K.வெங்கடேசன் அவர்கள் 9.1.2014 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்டம், நெய்வேலி நகர காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. S.தங்கராஜ் அவர்கள் 11.1.2014 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காவல் துறை உதவி ஆய்வாளர் ராமலிங்கம்; சிறப்பு உதவி ஆய்வாளர்கள் லோகராஜ், செழியன், கிருஷ்ணமூர்த்தி, தங்கராஜ்; தலைமைக் காவலர்கள் பாலன், ரவிகுமார், வெங்கடேசன்; முதல் நிலைக் காவலர் திருமதி தீபா, காவலர் மணிகண்டன் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த காவலர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடுமுதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**